**<u>IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT MUNSIF, ATTUR</u>**

**O.S. No.124/2022**

Deposition of **<u>P.W.1</u>** witnesses for Plaintiff/Defendant Solemnly affirmed by Tmt. A. Tamilselvi, Gr. III Bench Clerk of this court, on 12.08.2026 in accordance with the provision of Act 1 of 1873.

Name :விஜயகுமார் Father's Name : குப்புசாமி

துவக்க நேரம்: 1.00P.M.

சாட்சி முன்னிலையானார் உறுதிமொழி செய்து வைக்கப்பட்டார்.

**<u>1 ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை :</u>**

1. இறந்து போன சந்திரா எனது மனைவி என்றால் சரிதான் .1ம் பிரதிவாதி எனது மகள் என்றால் சரிதான் . எனது மனைவி சந்திராவிற்கு 1ம் பிரதிவாதி பிறந்த பின்னிட்டு மீண்டும் குழந்தைகள் பிறக்க வாய்ப்பு இல்லை என்று மருத்துவர்கள் கூறியதாக வழக்குரை, முதல் விசாரணை நிரூபண வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ள நிலையில் அது தொடர்பான மருத்துவ ஆவணங்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால் இல்லை. எனது மனைவி சந்திரா என்னை இரண்டாவது ஆக திருமணம் செய்து கொள்ள கூறினார் என்று குறிப்பிட்டுள்ள நிலையில் அதற்கான ஆவணங்கள் உள்ளதா என்றால் இல்லை. அவ்வாறு இரண்டாவது திருமணம் செய்து கொள்ள யார் முன்னிலையில் சந்திரா கூறினார் என்றால் அவரது பெற்றோர் முன்னிலையில் கூறினார். சந்திராவின்

பெற்றோர் தற்போது உயிருடன் உள்ளனரா என்றால் இல்லை. சந்திரா இறந்துவிட்ட காரணத்தால் அவர் கூறாத சங்கதிகளை கூறியதாக தற்பொழுது வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

2. நான் எதுவரை படித்துள்ளேன் என்றால் ஒன்பதாம் வகுப்பு வரை படித்துள்ளேன். முதல் திருமணத்தை சட்டப்படி ரத்து செய்யாமல் இரண்டாவது திருமணம் செய்து கொண்டால் அந்த திருமணம் செல்லாது என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் அப்போது தெரியாது. நான் என்ன தொழில் செய்து வருகிதேன் என்றால் ரைஸ் மில் நடத்தி வந்தேன் மற்றும் லாரி டிரான்ஸ்போர்ட் நடத்தி வந்தேன் மேலும் ராகவேந்திரா பள்ளியில் ஒரு பங்குதாரராக இருந்தேன். நான் மேற்கண்ட தொழில்களை செய்து வரும் நிலையில் நன்கு விவரம் தெரிந்தவர் என்றாலும் ஆனால் இரண்டாவது திருமணம் செய்து கொள்வது சட்டப்படி செல்லாது என்ற விவரம் தெரியாது என்று வழக்கிற்காக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல.

3. எனது வழக்குரையிலும் முதல் விசாரணை நிரூபண வாக்குமூலத்திலும் ஆண் வாரிசு வேண்டி எனது மனைவி சந்திரா என்னை இரண்டாவதாக திருமணம் செய்து கொள்ள கூறினார் என்று கூறியுள்ளது தவறு என்றால் சரியல்ல. நான் எந்த ஆண்டு இரண்டாவது திருமணம் செய்து கொண்டேன் என்றால் 1993 ஆம் ஆண்டு. எனது இரண்டாவது மனைவியின் பெயர் என்ன என்றால் சுமதி. நான் நடத்தி வந்த ரைஸ் மில்லில் சுமதி வேலை செய்து வந்தார் என்றால் இல்லை. சுமதி எந்த ஊரை சேர்ந்தவர் என்றால் மல்லியக்கரையை சேர்ந்தவர். எனக்கும் சுமதிக்கும் எவ்வாறு பழக்கம் ஏற்பட்டது என்றால் பெண் பார்த்து சுமதியை திருமணம் செய்து கொண்டேன்.

4. சுமதியை முறைப்படி பெண் பார்த்து திருமணம் செய்து கொண்டதற்கான புகைப்படங்களோ ஆவணங்களோ இவ்வழக்கில் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரிதான். நான் நடத்தி வந்த ரைஸ் மில்லில் சுமதி கூலி வேலை செய்து வந்தார் என்றாலும் அவருடன் முறையற்ற உறவில் இருந்து வருகிறேன் என்றாலும்

சரியல்ல நான் சுமதியை இரண்டாவதாக திருமணம் செய்து கொண்டேன். முதல் மனைவி உயிருடன் இருக்கும் போது இரண்டாவதாக திருமணம் செய்து கொள்வது சட்டப்படி செல்லாது என்றாலும் அவர் சட்டப்படியான வாரிசு ஆக முடியாது என்றாலும் சரியல்ல.

5. கடந்த 1993 ஆம் ஆண்டு முதல் தற்போது வரை நான் சுமதி உடன் தான் வாழ்ந்து வருகிறேன் என்றால் சரியல்ல, சுமதி , சந்திரா ஆகிய இருவருடனும் குடும்பம் நடத்தி வந்தேன். அவ்வாறு கடந்த 1993 ஆம் ஆண்டிற்கு பின்னிட்டு சந்திராவுடன் குடும்பம் நடத்தி வந்தேன் என்பதற்கான ஆவணங்கள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால் அது பற்றி எனக்கு தெரியவில்லை. நான் சுமதி உடன் எந்தெந்த ஊர்களில் குடும்பம் நடத்தி வந்தேன் என்றால் உலிபுரம் ஆத்தூர் ஆகிய ஊர்களின் குடும்பம் நடத்தினேன்.

6. 1ம் பிரதிவாதி சிறுவயதாக இருந்தபோதே நான் சந்திராவை கைவிட்டு விட்டு சுமதி உடன் சென்று விட்டேன் என்றாலும் அதன் பின்னிட்டு சந்திராவுடன் வாழ்ந்ததில்லை என்றாலும் சரியல்ல. சந்திரா அவரது ரியல் எஸ்டேட் மற்றும் சுய தொழில் மூலம்தான் வருமானம் ஈட்டி அவரையும் அவரது குழந்தையும் பராமரித்து வந்தார் என்றால் சரியல்ல அவருக்கு என்று தனியாக எந்த வருமானமும் இல்லை. நான் சந்திரா பெயரில் சொத்து வாங்கியதாக குறிப்பிட்டுள்ள நிலையில் எந்த தேதியில் எந்த இடத்தில் இருந்த சொத்தை கிரயம் வாங்கினேன் என்று குறிப்பிட்டு கூறவில்லை என்றால் சரிதான்.

7. சந்திரா எப்பொழுது இறந்தார் என்றால் கடந்த 25.03.2020 அன்று இறந்தார். சந்திரா இறந்த விவரம் 1 ஆம் பிரதிவாதி சொல்லி தான் எனக்கு தெரியும் என்றால் சரியல்ல. நான் சுமதி உடன் ஆத்தூரில் உள்ள ஹவுசிங் போர்டில் இருந்தபோது 1ம் பிரதிவாதி சொல்லி தான் சந்திரா இறந்த விவரம் எனக்கு தெரியும் என்றால் சரியல்ல நான் தினமும் சந்திரா வீட்டிற்கு செல்வேன் அவ்வாறு சென்ற போது தான் அவர் இறந்த விவரம் எனக்கு தெரிய வந்தது. சுமதிக்கு எத்தனை குழந்தைகள் என்றால் ஒரு ஆண் குழந்தையும் ஒரு பெண் குழந்தையும்

உள்ளனர். மேற்படி இருவரையும் நான் தான் பாராமறித்து வருகிறேன் என்றால் சரிதான்.

8. நான் தற்பொழுது என்ன தொழில் செய்து வருகிறேன் என்றால் எந்த தொழிலும் இல்லை. தற்பொழுது எனக்கு தனிப்பட்ட முறையில் வருமானம் இல்லை என்றால் சரிதான். நான் லாரி டிரான்ஸ்போர்ட் நடத்தி வந்தபோது ரேஷன் அரிசியை கடத்தியதாக என் மீது குற்ற வழக்கு பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். மேற்படி வழக்கு பதிவு செய்யப்பட்ட பின்னர் எனக்கு தொழிலில் பெருத்த நஷ்டம் ஏற்பட்டது என்றாலும் அதன் பின்னிட்டு சந்திராவிடமிருந்து பணத்தை பெறுவதற்கான மட்டுமே அவரது வீட்டிற்கு வந்து செல்வேன் என்றாலும் சரியல்ல. நான் சந்திராவை பணம் கேட்டு அடித்து துன்புறுத்திய காரணத்தால் அவர் விவாகரத்து கேட்டு ஆத்தூர் சார்பு நீதிமன்றத்தில் HMOP 71/2019 என்ற மனு தாக்கல் செய்தார் என்றால் விவாகரத்து கோரி வழக்கு போட்டார் ஆனால் நான் அடித்து துன்புறுத்தியது இல்லை என்ன காரணத்திற்காக வழக்கு போட்டார் என்று எனக்கு தெரியாது. மேற்படி வழக்கில் நான் வழக்கறிஞர் மூலம் ஆஜராகி பதிலுறை தாக்கல் செய்தேன் என்றால் சரியல்ல. நானாகத்தான் ஆஜர் ஆனேன் பின்னிட்டு சந்திரா இறந்து விட்டதால் வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டது.

9. சந்திராவின் பெயரில் உள்ள அனைத்து சொத்துகளும் அவரது உழைப்பில் வாங்கப்பட்டது என்றால் சரியல்ல. கடந்த 1993 ஆம் ஆண்டிற்கு பின்னிட்டு சந்திராவிற்கும் எனக்கும் எவ்வித தொடர்பும் இல்லை என்றாலும் அவருடன் எவ்விதமான நல்லது கெட்டது நிகழ்ச்சிகளிலும் நான் கலந்து கொண்டது இல்லை என்றாலும் சுமதி உடன் மட்டும்தான் வாழ்ந்து வந்தேன் என்றாலும் சரியல்ல. 1ம் பிரதிவாதி மனிதாபிமான அடிப்படையில் சந்திரா இறந்ததை எனக்கு தெரிவித்தார் என்றால் சரியல்ல. சந்திராவின் இறப்பிற்கு பின்னிட்டு 1ம் பிரதிவாதி அவர் திருமணம் செய்து கொண்ட ஊரான நங்கவள்ளிக்கு சென்றிருந்தபோது நானும் சுமதி மற்றும் அவரது மகன் நிர்மல் சக்கரவர்த்தியும் சேர்ந்து சந்திராவின் வீட்டின் பூட்டை உடைத்து அத்துமீறி உள்ளே நுழைந்தோம் என்றால் சரியல்ல. ஆத்தூரில்

உள்ள சந்திரா வாழ்ந்து வந்த வீடு 1ம் பிரதிவாதிக்கு அவர் உயிருடன் இருந்தபோதே உயில் எழுதி வைத்துவிட்டார் என்றாலும் அந்த வீட்டை தற்போது நானும் சுமதியும் ஆக்கிரமிப்பு செய்துள்ளோம் என்றாலும் சரியல்ல. மேற்படி வீட்டின் சுவாதீனம் கேட்டு 1ம் பிரதிவாதி திலகா அசல் வழக்கு எண் 70/2021 என்ற வழக்கை தாக்கல் செய்து உள்ளார் என்றால் சரிதான்.

10. நான், அசல் வழக்கு எண் 70 /21 இல் தொடர்புடைய சொத்து மற்றும் 1ம் பிரதிவாதி சந்திராவின் இறப்பிற்கு பின்னிட்டு விற்பனை செய்த சொத்துக்களையும் சேர்த்து பாகப்பிரிவினை வழக்கு தாக்கல் செய்து அந்த வழக்கு அ.வ.எண் 117/2020 என்ற எண்ணில் நிலுவையில் இருந்து வருகிறது என்றால் சரிதான். மேற்படி பாகப்பிரிவினை வழக்கில் சந்திராவின் வாரிசு என்ற அடிப்படையில் எனக்கு பரிகாரம் கிடைக்கும் என்றாலும் இந்த வழக்கு அவசியமற்ற ஒன்று என்றாலும் சரியல்ல.

11. கடந்த 01.06.2020 அன்று ஆத்தூர் வட்டாட்சியர் அவர்கள் முறைப்படி விசாரணை செய்து தான் வா.சா.ஆ 2 ஆன வாரிசு சான்றை வழங்கி உள்ளார் என்றால் வாரிசு சான்று வழங்கப்பட்டுள்ளது ஆனால் முறைப்படி விசாரணை செய்யவில்லை. மேற்படி தேதியில் நான் சுமதி உடன் வசித்து வந்த போது ஆத்தூர் வட்டாட்சியர் அவர்கள் என்னை விசாரணை செய்தார் என்றாலும் அப்பொழுது எனக்கும் சந்திராவிற்கும் தொடர்பில்லை என்று கூறியதால் தான் 1ம் பிரதிவாதியை மட்டும் வாரிசாக சேர்த்து வாரிசு சான்று வழங்கப்பட்டுள்ளது என்றாலும் சரியல்ல. மேற்படி வாரிசு சான்று வழங்கப்படுவதற்கு முன்பு வட்டாட்சியர் என்னை விசாரிக்கவில்லை என்று கோட்டாட்சியர் அவர்களுக்கு மாவட்ட ஆட்சியர் அவர்களுக்கு புகார் மனு அனுப்பியுள்ளேனா என்றால் அனுப்பி உள்ளேன். நான் சொல்வது போல் எவ்வித புகார் மனுவும் அனுப்பப்படவில்லை என்றாலும் அவ்வாறு அனுப்பி இருந்தால் அதன் நகல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டு இருக்கும் என்றாலும் சரியல்ல.

1ம் பிரதிவாதி தரப்பு வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை

தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது.

முடிவு நேரம்: 1.40 P.M.

Taken down before / by me in open court and read over / interpreted to the witness and acknowledged by him / to be correct

Sd/- D. Jansi Rani,
Additional District Munsif, Attur

Typed by Selvi. S. Reshma- O.S. No.124/2022 , Dt.12.08.2026.